வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 17.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மொழி, இலக்கியம், கலை, ஆன்மிகம் போன்ற கலாச்சாரத் தூண்கள் தான் நாட்டின் அடையாளத்தை கட்டமைப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

அரியானாவில், மூத்த பிஜேபி தலைவர் திரு நயாப் சிங் சைனி, இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

சரியான தகவல்களையும், தரமான நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு வழங்கும் பொறுப்பு, ஒலிபரப்பாளர்களுக்கு இருப்பதாக, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

தீபாவளியின் போது புதுச்சேரியில் பசுமைப் பட்டாசுகள் மட்டுமே, காலையிலும்-மாலையிலும் தலா 1 மணி நேரத்திற்கு அனுமதிக்கப்படும் என, மாநில மாசுக் கட்டுப்பாட்டு குழுமம் தெரிவித்துள்ளது.

மோடி-அபிதம்மா

மொழி, இலக்கியம், கலை, ஆன்மிகம் போன்ற கலாச்சாரத் தூண்கள் தான் நாட்டின் அடையாளத்தை கட்டமைப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, சர்வதேச அபிதம்மா தின விழாவில் உரையாற்றிய அவர் இந்தியா முன்னேற்றப்பாதையில் நடைபோடும் அதேவேளை, நாடு, சுய பெருமிதம் மற்றும் தன்னம்பிக்கையிலும் ஆழமாகக் காலூன்றி இருப்பதாக கூறினார்.

மனிதகுலத்தின் இருப்பு தொடர்பான கேள்விகளுக்கு விடையாக பகவான் புத்தர் வழங்கிய போதனைகளே, தம்மா என அழைக்கப் படுவதாகவும், உலகம் போர்ப் பிணக்கில் இருந்து விடுபட்டு, அமைதிப்

பாதையில் பயணிக்கத் தேவையான தீர்வுகளை, புத்தரின் போதனைகளில் இருந்து கண்டுபிடிக்க முடியும் என்று பிரதமர் கூறினார்.

இந்தியா 2047-ஆம் ஆண்டு வரையிலான அமிர்த காலத்தில், முக்கிய மாற்றங்களுக்கான பயணத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், முன்னேறிய நாடாக இந்தியா எழுச்சி பெறுவதை, இக்கால கட்டத்தில் காண முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். வளர்ச்சிக்கான இந்தியாவின் செயல் திட்டம், பகவான் புத்தர் வழங்கிய ஞானத்தை வழிகாட்டியாகக் கொண்டு, முன் எப்போதும் இல்லாத நேர்மறை மாற்றங்களைக் கொண்டு வரும் என்றும் அவர் கூறினார். மொழிகளே கலாச்சாரம் மற்றும் நாகரீகத்தின் ஆன்மா எனக் குறிப்பிட்ட அவர், பாலி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து, வழங்குவதான அரசின் முடிவு, பகவான் புத்தரின் ஞானப் பாரம்பரியத்திற்கு அளிக்கப்படும் மரியாதை என்றார்.

நாட்டின் கலாச்சார மரபுகளை பேணிக் காக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், வெளிநாடுகளில் இருந்து இந்தியாவின் தொன்மையான 600 கலைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதே இதற்கு சான்றாகும் என்றும் கூறினார். இந்திய இளைஞர்கள் அறிவியல் தொழில் நுட்பத்தில் உலக அளவில் முன் நிற்கும் அதே வேளை, நாட்டின் கலாச்சார மாண்புகள் குறித்து பெருமிதம் கொள்ள வேண்டும் என பிரதமர் மேலும் கேட்டுக் கொண்டார்.

*அரியானா*

அரியானாவில் மூத்த பிஜேபி தலைவர் திரு நயாப் சிங் சைனி, முதலமைச்சராக இன்று பதவி ஏற்றுக் கொண்டார். பஞ்ச்குலாவில் உள்ள ஷாலிமார் மைதானத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் இன்று நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் அரியானா ஆளுநர் திரு பண்டாரு தத்தாத்ரேயா, திரு சைனிக்கும், 13 அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, திரு நிதின் கட்கரி, திரு மனோகர் லால், திரு லாலன் சிங், அசாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா, குஜராத் முதலமைச்சர் திரு

பூபேந்திர பட்டேல், மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மூத்த பிஜேபி தலைவர்கள் திரு தேவேந்திர ஃபட்நவீஸ், திரு ராம் மோகன் யாதவ், மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவர்கள் பலரும், பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டனர். அரியானா முதலமைச்சராக திரு நயாப் சிங் சைனி பதவி ஏற்பது இது 2-ஆவது முறையாகும்.

மோடி-மாநாடு

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் மாநிலங்களில் முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்கள் மாநாடு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்று வருகிறது. பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ஆகியோரும் இதில் பங்கேற்றுள்ளனர். நாட்டின் பல்வேறு மாநிலங்களில் தற்போது, பாரதிய ஜனதாவைச் சேர்ந்த 13 தலைவர்கள் முதலமைச்சர்களாகவும், 16 தலைவர்கள் துணை முதலமைச்சர்களாகவும் உள்ளனர். இதுஅல்லாது, மகாராஷ்டிரா, ஆந்திரா, சிக்கிம், நாகாலாந்து, மேகாலயா உள்ளிட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் பிஜேபி தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அசாம்-நீதிமன்றம்

வங்க தேசத்தில் இருந்து 1966 ஜனவரி 1-ஆம் தேதிக்கு முன்னர் தாயகம் திரும்பிய இந்திய வம்சாவளியினரை, இந்திய பிரஜைகளாக கருதும் வகையில், அசாம் உடன்பாட்டைத் தொடர்ந்து, கடந்த 1985-ஆம் ஆண்டு, குடியுரிமை சட்டத்தில் சேர்க்கப்பட்ட 6-ஏ பிரிவு, அரசியல் சாசனப்படி செல்லுபடியாகும் என, உச்சநீதிமன்றம், 4-1 என்ற பெரும்பான்மை அடிப்படையில் தீர்ப்பளித்துள்ளது. சட்ட விரோத குடி பெயர்வு பிரச்சனைக்கான அரசியல் தீர்வே அசாம் ஒப்பந்தம் என்று தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அமர்வு இன்று தனது தீர்ப்பில் கூறியது. புதிய பிரிவை சட்டத்தில் சேர்க்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருப்பதாக, நீதிபதிகள் திரு சூரியகாந்த்,

திரு எம்எம் சுந்தரேஷ், திரு மனோஜ் மிஸ்ரா ஆகியோர், தீர்ப்பில் பெரும்பான்மை கருத்தை வெளியிட்டனர்.

*விஷச் சாராயம்*

பீகார் மாநிலம் சிவான் மற்றும் சரண் மாவட்டங்களில், விஷச் சாராயம் அருந்தியதால் 25 பேர் உயிர் இழந்தனர். மேலும் 22 பேர் பார்வை இழப்பு மற்றும் இதர பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மதுவிலக்கு மற்றும் கலால் வரி அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட கிராமங்களில் முகாமிட்டு நிலவரங்களை கண்காணித்து வருகின்றனர். உயிரிழந்தவர்களின் உடற்கூறாய்வு அறிக்கை கிடைத்த பின்னரே, மரணங்களுக்கான காரணத்தை இனம் காண இயலும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*எல் முருகன்*

சரியான தகவல்களையும், தரமான நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு ஒலிபரப்பாளர்களுக்கு இருப்பதாக, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். புதுடெல்லியில் நடைபெறும் இந்தியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டில், ஒலிபரப்புத் துறையில் உருவாகி வரும் புதிய போக்குகளும், தொழில் நுட்பங்களும் என்ற தலைப்பில் இன்று நடைபெற்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார். பொருளாதார வளர்ச்சியில் ஒலிபரப்புத் துறையின் பங்களிப்பை வலுப்படுத்தும் வகையில் புதிய தொழில் நுட்பங்களை இத்துறையில் புகுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். நாட்டின் 234 நகரங்களில் 730 தனியார் வானொலி அலைவரிசைகளை தொடக்க மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். ஊடகங்களுக்குத் தேவையான உள்ளடக்கத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள, அனிமேஷன் உள்ளிட்ட, AV-GC துறையினர் இந்தியாவில் வர்த்தகம் புரிவதை எளிமையாக்க, ஒற்றைச் சாளர முறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளை அரசு ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டில் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வரும் ஆற்றல்

ஒலிபரப்புத் துறைக்கு இருப்பதால் இத்துறையினர் புதிய தொழில் நுட்பங்களை உடனுக்குடன் ஏற்றுக் கொள்ளுதல் அவசியம் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை செயலர் திரு சஞ்சய் ஜாஜு இந்நிகழ்ச்சியில் பேசுகையில், மொபைல் தொலைபேசிகளில் இணைய இணைப்பு இல்லாமலேயே தொலைக்காட்சி ஒளிபரப்பை நிகழ் நேரத்தில் வழங்குவதற்கான, பரிசோதனை முயற்சிகளில் பிரசார் பாரதி ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். இந்திய தொலை தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின தலைவர் திரு அனில்குமார் லகோட்டி, உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*ரங்கசாமி-வாழ்த்து*

அரியானா முதலமைச்சராக இன்று பதவி ஏற்றுள்ள திரு நயாப் சிங் சைனிக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். அரியானாவில் தொடர்ந்து 3-ஆவது முறையாக பிஜேபி ஆட்சி அமைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றும், புதிய முதலமைச்சர், வெற்றிகரமான நிர்வாகம் மூலம் எண்ணற்ற சாதனைகளை படைக்க தம் சார்பிலும் புதுச்சேரி மக்கள் சார்பிலும் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாகவும், திரு சைனிக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் திரு ரங்கசாமி கூறி உள்ளார்.

*பட்டாசு-அறிவுறுத்தல்*

உச்சநீதிமன்ற உத்தரவின் படி, தீபாவளியின் போது புதுச்சேரியில் பசுமைப் பட்டாசுகள் மட்டுமே, காலையிலும்-மாலையிலும் தலா 1 மணி நேரத்திற்கு அனுமதிக்கப்படும் என, மாநில மாசுக் கட்டுப்பாட்டு குழுமம் தெரிவித்துள்ளது. மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், மற்றும் வழிபாட்டுத் தலங்களை சுற்றி உள்ள 100 மீட்டர் அமைதிப் பகுதிக்குள் பட்டாசு வெடிக்க கூடாது என்றும், வெடிக்கும் இடத்தில் இருந்து 4 மீட்டர் தொலைவில் 125 டெசிபல் அளவை விட அதிக சத்தம் ஏற்படுத்தும் பட்டாசுகளுக்கு அனுமதி இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்டாசுகளை வெடிப்பதால் சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன், வயதானவர்கள், நோயாளிகள் உட்பட அனைத்து பிரிவு மக்களுக்குப் பல உடல் நலப் பிரச்சனைகளும் ஏற்படுவதால், பட்டாசுகளின் பயன்பாடு

தொடர்பான விதிமுறைகளை பொது மக்கள் முழுமையாக கடைபிடித்து பொறுப்பான முறையில் தீபாவளி கொண்டாட வேண்டும் என்று புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டுக் குழுமம் கேட்டுக் கொண்டுள்ளது.

*காந்தா எக்ஸ்பிரஸ்*

தீபாவளிக்கு முன்னர் வெங்காயத்தின் தேவை அதிகரிப்பதை சமாளிக்க, மத்திய அரசு இன்று நாசிக்கில் இருந்து டெல்லிக்கு, காந்தா எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயில் ஒன்றை இயக்குகிறது. ஆயிரத்து 600 டன் வெங்காயத்துடன் இந்த ரயில், வரும் 20-ஆம் தேதி தலைநகரை சென்றடையும் என்றும், அதன் பின்னர் டெல்லி தலைநகரப் பிரதேசத்தில் உள்ள மொத்த விலை மண்டிகளுக்கு வெங்காயம் அனுப்பி வைக்கப்படும் என்றும் மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலர் திருமதி நிதி கரே தெரிவித்துள்ளார். இத்தகைய காந்தா எக்ஸ்பிரஸ் ரயில்கள் விரைவிலேயே லக்னோ,வாரணாசி மற்றும் வடகிழக்கு பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் இயக்கப்படும் என்று அவர் கூறி உள்ளார். சில்லரை விலை வெங்காய விநியோகம் தொடர்பாக, பல்வேறு சில்லரை விற்பனை நிறுவனங்கள் மற்றும் இ-வர்த்தக நிறுவனங்களுடன் மத்திய அரசு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. சில்லரை விலை சந்தையில் மானிய விலையில் வெங்காயம் விற்கும் பணிகளில் கூடுதலாக ஆயிரம் நடமாடும் வாகனங்கள் ஈடுபடுத்தப்படும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*ரயில்வே முன் பதிவு*

ரயில் டிக்கெட்டுகளை முன் பதிவு செய்வதற்கான 120 நாள் அவகாசத்தை 60 நாளாக குறைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இப்புதிய விதிமுறை, அடுத்த மாதம் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என, ரயில்வே அமைச்சகம் சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. ஆயினும் இவ்வாண்டு அக்டோபர் 31-ஆம் தேதி வரையிலான பயணத்திற்கு முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட எல்லா டிக்கெட்டுகளும், செல்லுபடியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான 365 நாள் முன்பதிவு உச்சவரம்பில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வானிலை

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று அதிகாலை, புதுச்சேரிக்கும்-நெல்லூருக்கும் இடையே, சென்னைக்கு வடக்கே கரையைக் கடந்த பின்னர், தொடர்ந்து, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வலுவிழந்து வருகிறது. அதேசமயம் வடதமிழகப் பகுதிகள் மற்றும் லட்சத் தீவு பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகள் நிலவுகின்றன. இதன் காரணமாக இன்று தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும். புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம், வேலூர், திருப்பத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வரும் 23-ஆம் தேதி வரை, தமிழகம் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராமநாதபுரம் மாவட்டம் வட்டானத்தில் 6 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கலை-விழா

இந்தியாவிற்கு விடுதலையும், கலை-கலாச்சாரத் துறைகளின் மறுமலர்ச்சி மூலம் நாட்டிற்கு தனி அடையாளமும் பெற்றுத் தந்த இந்திய தேசிய இயக்கம் என்ற கருப்பொருள் அடிப்படையில். இந்திய சர்வதேச மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 5 நாள் வருடாந்திர கலை விழா புதுடெல்லியில் நாளை தொடங்க உள்ளது. இசை, நடனம் மற்றும் கலை இலக்கிய நிகழ்ச்சிகளுடன், உணவுத் திருவிழாவும், இந்திய தேசிய இயக்கம் குறித்த கண்காட்சி மற்றும் திரைப்பட விழாவும், இதில் இடம் பெற உள்ளன.

மொழி, இலக்கியம், கலை, ஆன்மிகம் போன்ற கலாச்சாரத் தூண்கள் தான் நாட்டின் அடையாளத்தை கட்டமைப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

அரியானாவில், மூத்த பிஜேபி தலைவர் திரு நயாப் சிங் சைனி, இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

சரியான தகவல்களையும், தரமான நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு வழங்கும் பொறுப்பு, ஒலிபரப்பாளர்களுக்கு இருப்பதாக, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

தீபாவளியின் போது புதுச்சேரியில் பசுமைப் பட்டாசுகள் மட்டுமே, காலையிலும்-மாலையிலும் தலா 1 மணி நேரத்திற்கு அனுமதிக்கப்படும் என, மாநில மாசுக் கட்டுப்பாட்டு குழுமம் தெரிவித்துள்ளது.

---------------------------